(Al-Quran – Chapter 20 - “Thaha”)

43. Go both of you to Pharoh, for he has transgressed all bounds.

44. Speak to him with gentle words: he may yet heed and fear (God).

45. ‘Lord,’ they (Moosah and Haroon) said, ‘We fear lest he should hasten to do evil to us or transgress all bounds.’

46. God replied: ‘Have no fear I shall be with you. I see all and hear all.

(அல்குர்ஆன் – அத்தியாயம் 20 - தாஹா)

43. “நீங்கள் இருவரும் ஃபிர்அவ்னிடம் செல்லுங்கள்; நிச்சயமாக அவன் வரம்பு மீறிவிட்டான்.”

44. “நீங்கள் அவனிடம் (சாந்தமாக) மென்மையான வார்த்தைகளால் பேசுங்கள்; அதனால், அவன் நல்லுபதேசம் பெறலாம்; அல்லது அச்சம் கொள்ளலாம்.”

45. “எங்கள் இறைவனே! அவன் எங்களுக்குத் தீங்கிழைக்கத் தீவிரப்படவோ அல்லது வரம்பு மீறவோ செய்யலாம் என்று நாங்கள் பயப்படுகிறோம்” என அவர்கள் (மூஸாவும், ஹாரூனும்) கூறினார்கள்.

46. (அதற்கு அல்லாஹ்) “நீங்களிருவரும் அஞ்ச வேண்டாம்; நிச்சயமாக நான் (யாவற்றையும்) செவியேற்பவனாகவும், பார்ப்பவனாகவும் உங்களோடு இருக்கிறேன்” என்று கூறினான்.

## LTTE MEETS MUSLIM CIVIL SOCIETY TO RESOLVE TAMIL MUSLIM CONFLICTS IN TRINCOMALEE DISTRICT

When LTTE expressed their desire to discuss Trincomalee District Muslim grievances with Muslim Civil Society at a meeting on 22nd December 2003 initiated by Dr. Kumar Rupasinghe, Chairman - Foundation for Co-existence and facilitated by Al-Haj Ali Zahir Maulana - Ex. M.P. and Eastern Province Special Advisor to the Prime Minister, a decision was taken unanimously to commence discussions immediately with LTTE, at the General Meeting of the North East Muslim Peace Assembly held at the Sri Lanka Foundation Institute on 28th December 2003 attended by 82 representatives from 33 predominate Muslim Village Units in the North East.

It was realised that the main reason for the present conflict between the Tamils and Muslims in the North East is the undue delay in implementing the agreements reached between the LTTE leader Pirabakaran and SLMC leader Rauff Hakeem on 13th April 2002 and the decision at the 5th Session of the peace talk held in Berlin during 7th and 8th February 2003 for the establishment of village level peace committees in the North East to resolve Tamil Muslim conflicts.

In a surprise move, LTTE Senior leaders of Trincomalee District met Muslim Civil Society - representatives form the North East Muslim Peace Assembly – NEMPA on 30th December 2003 and discussed varies issues affecting Tamil Muslim relationship and decided to established village level zonal committees in the following areas to resolve the issues:
Kinniya, Thambalakamam, Mutur, Thoppur, Trincomalee Town, Kutchaweli and Pulmuddai.

LTTE Trincomalee Military Commander Pathuman Amman, Political leader Thilak Amman and Senior Official of the LTTE - S. Devan, T. Sivakumar, T. Sathya, S. Darman, Miss. T. Karunya, S. Udayan and NEMPA Secretary General M.I.M. Mohideen and Senior Officials - Assistant Secretary U.A. Wahab, M.M. Kareem Maulavi - Mutur , M.A.M. Anver - Kinniya, A. Jabeer - Kinniya, A.S.M. Abdeen - Mutur, M.M. Abdul Salam - Pulmoddai, M.A.G.M. Sabir - Thoppur, M.Y. Hidayathulla Maulavi - Kinniya, J.M. Yusoof – Trincomalee Town and K.A. Rahuman – Mutur, participated in the discussions together with Mr. Ali Zahir Maulana, at LTTE "Naduwappaniyakam" in Sampoor. The discussion lasted three hours and the following decisions were taken unanimously by both parties.

1. Formation of Zonal Peace Committees of Tamils and Muslims in the following areas of Trincomalee District.
   Mutur, Kinniya, Thopur, Trincomalee Town and Kuchchaveli

2. Members of the Zonal Committees.

| | |
|---|---|
| Mutur | - Dhevan, K. Bavan, Maulavi Kareem, K.A. Rahuman |
| Kinniya | - Molilan, Sathian, Maulavi Hidayathulla, A. Jabeer |
| Thopur | - Varnan, Nisanthan, Sabeer, B.M.A. Latheef |
| Trincomalee | - Dharman, Atputhan, J.M. Yoosuf, A.S. Rumy |
| Kuchchaveli | - Sivakumar, Ilakkiyan, M.I.M. Aasiqu, M.M.A. Salam |

3. Zonal Committees will function in the following places:
   Mutur – DS Office, Thopur – Fathima Girls Maha Vidyalayam,
   Kinniya – Alankulam Vinayahar Vidyalayam, Trincomalee – City Office,
   Kuchchaveli – DS Office

4. The Zonal Committee members shall constitute the Trincomalee District Tamil Muslim Peace Committee.

5. LTTE Special Commander Pathuman Amman, Political Leader Thilak, Maulavi Kareem of Mutur and Maulavi Hithayethulla of Kinniya will be the Co-ordinators.

6. The Zonal Committees will start meeting from 5th January 2003 and when ever it is necessary thereafter but minimum every two weeks and prepare for the District Committee meeting within 3 months.

The photograph shows the NEMPA delegation with LTTE Trincomalee Special Commander Pathuman and Political Leader Thilak.

**M.I.M. Mohideen**
Secretary General,
North East Muslim Peace Assembly - NEMPA

30th December 2003

## தமிழருக்கும் முஸ்லிம்களுக்கும் இடையில் அடிக்கடி ஏற்கடும் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு விடுதலைப்புலிகள் முஸ்லிம் பொதுமக்களோடு திருகோணமலையில் பேச்சுவார்த்தை

சமாதான சகவாழ்வு மன்றத் தலைவர் கலாநிதி குமார் ரூபசிங்கா அவர்களின் ஏற்பாட்டின்படி முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும், பிரதம மந்திரியின் கிழக்கு மாகாண ஆலோசகருமான அல்-ஹாஜ் அலிசாஹிர் மௌலானாவின் அனுசரணையோடு டிசம்பர் 20ம் திகதி நடந்த சந்திப்பின்போது விடுதலைப்புலிகள் திருகோணமலை மாவட்ட தமிழர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையில் அடிக்கடி ஏற்படும் பிரச்சினைகளுக்கு தீர்வு காணுவதற்காக முஸ்லிம் பொது மக்களோடு பேச்சுவார்த்தை நடத்துவதற்கான விருப்பத்தை தெரிவித்துள்ளனர் என்பதை கொழும்பு இலங்கை மன்றக் கல்லூரியில் 2003, டிசம்பர் 28ம் திகதி வடக்கு கிழக்கு மாகாணத்தில் உள்ள 33 பிரதான முஸ்லிம் ஊர்களிலிருந்து 82 க்கும் கூடுதலான பிரதிநிதிகள் கலந்து கொண்ட வடக்கு கிழக்கு முஸ்லிம் சமாதானப் பேரவையின் பொதுக்கூட்டத்தில் தெரிவித்தபோது விடுதலைப்புலிகளுடன் உடனடியாக பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் என்று ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

2002 ஏப்ரல் 13 ஆம் திகதி விடுதலைப்புலிகள் தேசியத் தலைவர் பிரபாகரன் அவர்களும் முஸ்லிம் காங்கிரஸ் தேசியத் தலைவர் றவூப் ஹக்கீம் அவர்களும் கைச்சாத்திட்ட உடன்படிக்கையிலும், கடந்த பெப்ரவரி மாதம் 7,8 ஆம் திகதிகளில் பேளினில் நடந்த 5 ஆம் கட்ட சமாதானப் பேச்சுவார்த்தையின்போதும் வடக்கு கிழக்கு தமிழ் முஸ்லிம் பொதுமக்களின் நாளாந்த பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதற்கு கிராமிய மட்டத்தில் சமாதானக் குழுக்கள் ஏற்படுத்தப்பட வேண்டும் என்ற தீர்மானங்கள் நடைமுறைப் படுத்துவதில் ஏற்பட்டுள்ள அனாவசியமான தாமதங்களே முஸ்லிம்களுக்கும் தமிழர்களுக்குமிடையில் அடிக்கடி ஏற்படும் பிரச்சினைகளுக்கு முக்கிய காரணங்கள் என்று அனைவராலும் உணரப்பட்டது. எனவேதான் தாமதிக்காமல் உடனடியாக 2003 டிசம்பர் 30 ஆம் திகதி வடக்கு கிழக்கு முஸ்லிம் சமாதானப் பேரவை பிரதிநிதிகள் திருகோணமலை மாவட்ட LTTE முக்கிய இராணுவ அரசியல் தலைவர்களைச் சந்தித்து தமிழ் முஸ்லிம் மக்களின் சமாதான சகவாழ்வுக்கு முட்டுக்கட்டையாகவுள்ள பல முக்கிய விடயங்கள் பற்றிப் பேச்சுவார்த்தை நடத்தி அவைகளை உடனடியாகத் தீர்த்துவைப்பதற்கு கிண்ணியா, தம்பலகாமம், மூதூர், தோப்பூர், திருகோணமலை, குச்சவெளி, புல்மூட்டை ஆகிய பிரதேசங்களில் கிராமியமட்ட தமிழ் முஸ்லிம் சமாதான வலயக்குழுக்களை ஏற்படுத்தவேண்டும் என முடிவுசெய்யப்பட்டது.

LTTE திருகோணமலை இராணுவ விஷேட தளபதி பதுமன் அம்மான், அரசியல் துறை பிரதம பொறுப்பதிகாரி திலக் அம்மான் உட்பட LTTE சிசேஷ்ட உறுப்பினர்களான S. தேவன், T. சிவகுமார், T. சத்யா, S. தர்மன், செல்வி T. காருண்யா, S. உதயன் ஆகியோர் வடக்கு கிழக்கு முஸ்லிம் சமாதானப் பேரவையின் செயலாளர் நாயகம் M.I.M. முஹியத்தீன் உட்பட சிரேஷ்ட உறுப்பினர்களான - உபசெயலாளர் காத்தான்குடி U.A. வஹாப், மூதூர் M.M. கரீம் மௌலவி, A.S.M. ஆப்தீன், கிண்ணியா M.A.M. அன்வர், A. ஜாபிர் , M.Y. ஹிதாயதுல்லாஹ் மௌலவி, புல்முட்டை M.M. அப்துஸ்ஸலாம், தோப்பூர் M.A.G.M. சாபீர், திருகோணமலை J.M. யூசுப், K.A. றஹுமான் ஆகியோர், அல்-ஹாஜ் அலி-ஸாஹிர் மௌலானாவோடு இணைந்து 2003, டிசம்பர் 30 ஆம் திகதி சம்பூரில் உள்ள LTTE நடுவப் பணியகத்தில் முக்கியமான பலவிடயங்கள் பற்றிப் பேச்சுவார்த்தை நடாத்தியதன் பயனாக பின்வரும் தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன.

1. தமிழ், முஸ்லிம் சமாதான வலயக் குழுக்களை மூதூர், கிண்ணியா, தோப்பூர், திருகோணமலை, குச்சவெளி ஆகிய பிரதேசங்களில் ஏற்படுத்தல்.

2. LTTE - முஸ்லிம் சமாதான வலயக் குழு அங்கத்தவர்கள்

| | |
|---|---|
| மூதூர் | - தேவன், கே. புவன், மௌலவி கரீம், கே.ஏ. ரஹுமான் |
| கிண்ணியா | - மொழிலன், சத்தியன், மௌலவி ஹிதாயதுல்லா, ஏ. ஜாபீர் |
| தோப்பூர் | - வர்மன், நிசாந்தன், சபீர், பி.எம்.ஏ. லத்தீப் |
| திருகோணமலை | - தர்மன், அற்புதன், ஜே.எம். யூஸுப், ஏ.எஸ். ரூமி |
| குச்சவெளி | - சிவகுமார், இலக்கியன், எம்.ஐ.எம். ஆஸிக், எம்.எம்.ஏ. சலாம் |

3. வலயக் குழுக்கள் சந்திக்கும் இடங்கள்

| | |
|---|---|
| மூதூர் | - பிரதேச செயலாளர் அலுவலகம் |
| தோப்பூர் | - பாத்திமா பெண்கள் மஹா வித்தியாலயம் |
| கிண்ணியா | - ஆலங்குளம் விநாயகர் வித்தியாலயம் |
| திருகோணமலை | - நகர அலுவலகம் |
| குச்சவெளி | - பிரதேச செயலாளர் அலுவலகம் |

4. LTTE மாவட்ட முஸ்லிம் சமாதான குழுவில் சகல வலயக் குழு உறுப்பினர்களும் அங்கம் வகிப்பர்.

5. மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள் - LTTE விஷேட இராணுவத் தளபதி பதுமன், அரசியல்துறைத் தலைவர் திலக், மூதூர் கரீம் மௌலவி, கிண்ணியா ஹிதாயதுல்லா மௌலவி.

6. வலயக் குழுக்கள் கூட்டம் 2004, ஜனவரி 5 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டு தேவைப்படும் போதெல்லாம், குறைந்தது இரண்டு வாரங்களுக்கு ஒரு முறையாவது கட்டாயம் கூடி தமிழ் - முஸ்லிம் பிரச்சினைகளைக் கலந்துரையாடி சுமூகமான தீர்வை ஏற்படுத்த வேண்டும்.

வடக்கு கிழக்கு முஸ்லிம் சமாதானப் பேரவை முக்கியஸ்தர்கள் LTTE திருகோணமலை விஷேட இராணுவத் தளபதி பதுமன், அரசியல்துறைப் பிரதம பொறுப்பாளர் திலக் ஆகியோரை 2003, டிசம்பர் 30 ஆம் திகதி சம்பூரில் சந்தித்தபோது எடுக்கப்பட்ட படம்.

**எம்.ஐ.எம். முஹியத்தீன்**
செயலாளர் நாயகம்,
வடக்கு கிழக்கு முஸ்லிம் சமாதானப் பேரவை

30 டிசம்பர் 2003

**National Digitization Project**

***National Science Foundation***

Institute : South Eastern University of Sri Lanka

1. Place of Scanning : Main Library, South Eastern University of Sri Lanka, Oluvil
2. Date Scanned : 2018.02.15
3. Name of Digitizing Company : Sanje (Private) Ltd, No 435/16, Kottawa Rd, Hokandara North, Arangala, Hokandara
4. Scanning Officer

Name : I.W.A.C.J. Chandrasena

Signature : Charith

Certification of Scanning

*I hereby certify that the scanning of this document was carried out under my supervision, according to the norms and standards of digital scanning accurately, also keeping with the originality of the original document to be accepted in a court of law.*

Certifying Officer

Designation : Acting Librarian

Name : M. M. Mashroofa

Signature : [signature]

Date : 2018.02.15

*"This document/publication was digitized under National Digitization Project of the National Science Foundation, Sri Lanka"*